# புயலிலே ஒரு தோணி

**1.**புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன**?**

முன்னுரை

பொருளுரை

**(i)**தொங்கான் படும்பாடு

**(ii)**தொங்கானின் நிலை**.**

**(iii)**தொங்கான் மிதந்து சென்ற காட்சி

முடிவுரை

முன்னுரை:

இந்தோனேசியாவில் மெபின் நகரில் இருந்தபோது இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தது. ஆசிரியரின் நேரடி அனுபவங்களோடு கற்பனையும் கலந்த கதைதான் புயலிலே ஒரு தோணி என்னும் புதினம்.கடற்பயணத்தில் கண்ட காட்சிகளும் அதன் தொடர்ச்சியாக நடைபெறும் நிகழ்வுகளும்தான் இக்கதைப்பகுதி.

தொங்கான் படும்பாடு:

- கொளுத்திக் கொண்டிருந்த வெயில் இமைநேரத்தில் மறைந்துவிட்டது.
- புழுங்கிற்று. பாண்டியன் எழுந்து போய் அண்ணாந்து பார்த்தான். மேகப் பொதிகள் பரந்து திரண்டுக் கும்மிருட்டாய் இறுகி நின்றன.
- அலைகள் எண்ணெய் பூசியவை போல் மொழுமொழுவென நெளிந்தன. காற்றையே காணோம்.
- ஒரே இறுக்கம். எதிர்க்கோடியில் வானையும், கடலையும் மாறிமாறிப் பார்த்தவாறு தலைமை மாலுமி பரபரப்பாகப் பேசிக் கொண்டிருந்தார். மாலுமிகள் திடுமெனப் பாய்மரத்தை நோக்கி ஓடிச்சென்று கட்டுக் கயிறுகளை இறுக்குகிறார்கள்.
- விவரிக்க இயலாத ஓர் உறுத்தல் ஒவ்வோர் உணர்விலும்பட்டது, எல்லோரும் எழுந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து மிரண்டு விழித்தனர். திடுமென அமைதி பாய்ந்துவந்து மிரட்டியது. வானும் கடலும் பிரிந்து தனித்துத் தென்பட்டன.
- பலகை அடைப்புக்குள்ளிருந்து கப்பித்தான் (கேப்டன்) கத்துகிறான். "ஓடி வாருங்கள் ! இங்கே ஓடி வாருங்கள்"
- பாண்டியன் எழுந்தான். எங்கெங்கோ இடுக்குகளில் முடங்கிக் கிடந்த உருவங்கள் தலை தூக்கின.
- தொங்கான் தள்ளாடுகிறது. அலைகள் மலைத்தொடர் போன்ற அலைகள் மோதித் தாக்குகின்றன. தட்டுத் தடுமாறி நடந்தோடினர்.

தொங்கானின் நிலை!

- வானும் கடலும் வளியும் மழையும் மீண்டும் ஒன்று கூடிக் கொந்தளிக்கின்றன. வானம் பிளந்து தீ கக்கியது. மழை வெள்ளம் கொட்டுகிறது. வளி முட்டிப் புரட்டுகிறது. கடல் வெறிக் கூத்தாடுகிறது.
- கப்பல் நடுநடுங்கித் தாவித் தாவிக் குதிகுதித்து விழுவிழுந்து நொறு நொறுங்குகிறது. முகத்தில் வெள்ளம். உடலில் வெள்ளம். கால் கையில் வெள்ளம்.உடை, உடைமை இறுக்கியிறுக்கி ரம்பமாய் அறுக்கிறது.
- மரத்தூண், கல்தூண், இரும்புத்தூண், உயிர்த்தூண் கப்பல் தாவி விழுந்து சுழல்கிறது. சிந்துகிறது. தாவி நீந்துகிறது, இருட்டிருட்டு கும்மிருட்டு, குருட்டிருட்டு, சிலுசிலு மரமரப்பு இடி முழக்கச் சீனப் பிசாசுகள் தாவி வீசுகின்றன.

தொங்கான் மிதந்து சென்ற காட்சி:

- மூடைகள் சிப்பங்கள் நீந்தியோடி மறைகின்றன. தொங்கான் குதித்து விழுந்து நொறுநொறு  நொறுங்குகிறது. சுழன்று கிறுகிறுத்துக் கூத்தாடுகிறது கலவை அடிக்கிறது.
- என்னயிது! சூரிய வெளிச்சம்! சூரியன்! சூரியன்! சூரியன்! கப்பலில் நீர் நெளிகிறது. பாய்மரம் ஒடிந்து கிடக்கிறது. கப்பலின் இருபுறமும் பின்னேயும் தேயிலைப் பெட்டிகளும் புகையிலைச் சிப்பங்களும் மிதந்து வருகின்றன.
- பாண்டியன் நாற்புறமும் கடலைப் பார்த்து மலைத்து நின்றான். கடற்கூத்து எவ்வளவு நேரம் நீடித்ததென்று கணக்கிட முடியவில்லை தொடங்கியபோதோ, முடிந்தபோதோ முடிந்து வெகுநேரம் வரையிலோ யாரும் கடிகாரத்தைப் பார்க்கவில்லை.
- பார்த்தபோது எல்லாக் கடிகாரங்களும் நின்று போயிருந்தன. இனிமேல் பயமில்லை.இரண்டு நாளில் கரையைப் பார்க்கலாம்.
- அன்றிரவு யாரும் உண்ணவில்லை. பேச்சாடவில்லை.

முடிவுரை:

கடற்கூத்துக்குப் பின் ஐந்தாம் நாள் மாலையில் வானொடு வானாய் கடலோடு கடலாய் மரப்பச்சை தெரிவது போலிருந்தது. அடுத்த நாள் முற்பகலில் பினாங்குத் துறைமுகத்தை அணுகினார்கள்.

தொங்கான் கரையை நெருங்கிப் போய் நின்றது.